RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22450

OPEN ACCESS

# மதுரையின் பண்பாட்டு அடையாள உருவாக்கத்தில் புராணங்களை நிகழ்த்துதலின் பங்கு

பா. மாரிமுத்து [அ, *]

[அ] நாட்டுப்புறவியல் மற்றும் பண்பாட்டு ஆய்வுகள் துறை, நிகழ்த்துக்கலைப்புலம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை-625021, தமிழ்நாடு, இந்தியா

# The Role of Performing Puranas in the Formation of Cultural Identity of Madurai

B. Marimuthu [a, *]

[a] Department of Folklore and Culture Studies, School of Performing Arts, Madurai Kamaraj University, Madurai-625021, Tamil Nadu, India

* Corresponding Author: marimuthub5@gmail.com

Received: 13-06-2022
Revised: 24-09-2022
Accepted: 05-10-2022
Published: 19-10-2022

## ABSTRACT

The story is one of the four types of folklore. Mythology is also a story. Even basically speaking is referred to as speaking in Sri Lanka. The story usually starts with one or two people talking and it has evolved into great epics and mythology. Because the central view of folklorists is that all works such as puranas, epics and Sangam literatures must have basically emerged as a short story and evolved out of oral practice. Here we can see that the need for customs such as stories and puranas constitutes a cultural identity. This article explains how performing puranas plays an important role in the cultural identity formation of Madurai and thereby the cultural identity of the city is created.

**Keywords:** Madurai, Plays, Folklore, Epic

## முன்னுரை

நாட்டுப்புறவியலின் நான்கு வகைகளில் ஒன்று கதை. புராணம் என்பதும் கதையே. ஏன் அடிப்படையில் பேசுதல் என்பதை கூட இலங்கையில் கதைப்பது என்றே குறிப்பிடுகின்றனர். கதை என்பது சாதாரணமாக ஒன்று இரண்டு பேர் பேசுவதில் துவங்கி இதுவே பெரிய காவியங்கள் புராணங்களாகவும் உருவாகி இருக்கிறது. ஏனெனில் புராணங்கள் காவியங்கள் சங்க இலக்கியங்கள் என்னும் அனைத்து படைப்புகளும் அடிப்படையிலே ஒரு சிறு கதையாகவே தோன்றி வாய்மொழி வழக்கிலிருந்தே உருவாகி இருக்க வேண்டும் என்பதே நாட்டுப்புறவியலாளர்களின் மைய கருத்தாக உள்ளது. இங்கு கதைகள் புராணங்கள் போன்ற வழக்காறுகளின் தேவை என்பது ஒரு பண்பாட்டு அடையாளத்தை உருவாக்குவதாகவே அமைவதை காணலாம். இந்தக் கட்டுரை மதுரையின் பண்பாட்டு அடையாள உருவாக்கத்தில் புராணங்களை நிகழ்த்துதல் என்பது எவ்வாறு ஒரு முக்கிய பங்கு பெற்று, அதன் மூலம் எவ்வாறு நகரின் உடைய பண்பாட்டு அடையாளம் உருவாக்கப்படுகிறது என்பதை விளக்குகிறது.

## மதுரை

மதுரை என்பது இரண்டாயிரம் ஆண்டுகள் பழமையான நகரம். மதுரையின் பழைய பெயர் கூடல் நகர், விழாக்களின் நகரம் என்றெல்லாம் சிறப்பிக்கப்பட்ட பெயராகவே இருந்திருக்கிறது.

மதுரையில் பல்வேறு ஆட்சி முறைகள் பல்வேறு அரசு நிர்வாக முறைகள் தொடர்ந்து வந்துள்ளது. மேலும் மதுரையில் சமணம், பௌத்தம் போன்ற சமயங்களும் செழித்து வளர்ந்திருக்கிறது.

## சமய பூசல்கள்

சமணம், பௌத்தம் சைவம் போன்ற சமயம் முறைகளுக்கு இடையே சமய பூசல்களும் இருந்திருக்கிறது. கழுவேற்றம் போன்ற தண்டனை முறைகளும் இருந்திருப்பதை ஆய்வுகள் குறிப்பிடுகின்றது. இவ்வாறு சமய பூசல்கள் நிகழ்ந்துள்ளதும் இவற்றில் வென்ற சைவம் அதனிடம் தோற்ற மதத்தினரை கழுவேற்றியதும் மேலும் அவர்களின் சமய சின்னங்களை தாங்கள் ஏற்றுக் கொண்டதுமான வரலாற்றினை அழகர்கோயில் நூலில் தொ. பரமசிவன் எடுத்துரைப்பதை காணலாம்.

## சித்திரைத் திருவிழா

சித்திரை திருவிழாவில் நிகழ்த்தப்படும் புராணங்களும் சமய பூசல்களை சுட்டிக் காட்டுவது மட்டுமல்லாமல் மதுரை நகரம் உருவானதற்கான காரணத்தை சொல்ல முயல்வதையும் காணமுடிகிறது. மேலும் இறைவனின் திருவிளையாடல்களின் மூலமே மதுரை நகரம் அடையாளப் படுத்தப்படுவதையும் காண முடிகிறது.

## திருவிளையாடல் புராணம்

திருவிளையாடற் புராணம் இல்லையேல் மதுரையே இல்லை என்று கூறிவிடலாம். மேலும் வைகையே இல்லை எனில் அழகர் ஆற்றில் இறங்குவாரா? நாளைக்கு முக்கி அளிப்பாரா என்று கேட்டு விடலாம் என்பது போன்று அமைந்துள்ளது அழகரின் புராணம். இது மண்டுகபுராணம் என்றும் குறிப்பிடப்படுகிறது. இந்த அழகரின் புராணமே சித்திரை திருவிழாவில் அதனை நிகழ்த்தும்போது பெரும் பங்கு வகிப்பதை காணலாம் (Srinivasan, 1992).

## மண்டூகபுராணம்

கோபக்கார முனிவர் வருவதை கவனிக்காமல் குளித்துக் கொண்டிருந்த முனிவருக்கு சாபம் கிடைத்தது. அந்த சாபத்தால் தவளை ஆக்கப்பட்ட முனிவர் சித்ரா பௌர்ணமி அன்று வைகையில் இறங்கும் அழகரால் சாப விமோசனம் அளிக்கப்படுவார் என்று சாப விமோசனமும் வழங்கப்பட்டது அந்த தவளையாக்கப்பட்ட முனிவருக்கான புராணமே மண்டுக புராணம். வண்டுகம் என்றால் தவளை. கலிங்கத்து பரணி போல தோற்றவர் பெயராலேயே புராணத்தின் பெயரும் அமைந்துவிட்டது. இது மண்டப புராணம்.

## இரு புராணங்கள்

திருவிளையாடல் புராணம், மண்டுக புராணம். மதுரையின் பண்பாட்டு அடையாளமான சித்திரைத் திருவிழாவை மேற்கண்ட இரண்டு புராணங்களை நிகழ்த்துவதன் மூலமே திருவிழா ஒவ்வொரு ஆண்டும் நடத்திக் காண்பித்து நிறைவு பெறுகிறது. இறுதியில் மதுரை காண ஒரு பண்பாட்டு அடையாளமாக சித்திரைத் திருவிழா உருவாகிறது. கதைக்கான காரணம் ஒரு கதை. மதுரையின் பண்பாட்டு அடையாளமாக சித்திரைத் திருவிழாவை உருவாக்குவது என்பதே அந்த கதையின் காரணக்கதை. வழக்காறுகள் அரசியல் பண்பை அடிப்படையாகக் கொண்டது. இந்தப் பண்பாட்டு அடையாள உருவாக்க அரசியல் என்பதே இங்கு மையமானது ஆகும்.

## வழக்காறுகளின் அரசியல்

பிரெஞ்சு நாட்டு அறிஞர்களான டெலூஸ், தெரிதா போன்றோர் வழக்காறுகள் அனைத்தும் அரசியலானவை என்கிறார்கள். தெரிதா அனைத்து வழக்காறுகளும் அரசியலானவை அவற்றை கட்டுடைத்துப் பார்த்தால்தான் அதன் காரணமான அரசியலை காண முடியும் என்கிறார். மேலும் டெலூஸ் மற்றும் குட்டாரி என்பவர்கள் "சீசோபெரூனியா" (Schizophrenia) என்ற சொற்பதத்தை குறிப்பிட்டு, இது ஒரு நோய் போன்ற செயல்பாடு இதன் காரணமே மரபு, சுற்றுச்சூழல், மூளையின் வேதிப்பண்பு, மற்றும் மூளையின் அமைப்பினால் வந்த நிலை என்று நிறுவ முயல்வதை காணமுடிகிறது.

## வழக்காறுகளின் காரணம்

வழக்காறுகளின் அரசியல் என்பது இவ்வாறு ஒரு மனநிலையாக உணரப்படும் நிலையில், இது பெரும் குற்றமாகத் தோன்றும். ஆனால் இதுதான் இயல்பு, குற்றம் என்பதும் குற்றமில்லை என்பதும் அதனைப் பார்க்கின்ற, அதனை விமர்சிக்கின்ற, ஒரு குறிப்பிட்ட நிலையால் உருவாவதே ஆகும். எனவே வழக்காறுகளின் அரசியலை விட்டுவிட்டு, வழக்காறுகளின் காரணம் என்ன என்று தேட முயன்றால், இது ஒரு கதையின் காரணம் என்ன என்று தேட முயல்வதற்கு சமம். இவ்வாறு தேட முயன்றால் நாம் கட்டாயம் வாழ்நாள் முழுவதும் தேடினாலும் கிடைக்காது, எனவே வழக்காறுகள் தற்போது அரசியலுக்காகவே பயன்படுகிறது என்ற தற்காலிக முடிவுக்கு வரலாம். வழக்காறுகளுக்கான காரணம் அரசியலே. எனவே ஒரு கதைக்கு காரணம் ஒரு அரசியல் எனும் காரணமே ஆகும். எனவே புராணங்கள் எனும் கதை மதுரையின் பண்பாட்டு அடையாள உருவாக்கம் எனும் அரசியலுக்காகவே என்னும் தற்காலிக முடிவை சுட்டிக்காட்டுவதையே இந்த கட்டுரை முன்வைக்கிறது.

வழக்காறுகளின் காரணங்களை தேடுதல் எனும் மாயத் தீவுக்குள் சிக்காமல், அதற்கான தீர்வாக வழக்காறுகளின் அரசியலை குறிப்பாக வழக்காறுகளின் சமகால அரசியலை கண்டடைவதே சரியான தீர்வாக அமைய முடியும்.

வழக்காறுகளின் காரணம் என்பது இவ்வாறு தொடர்ந்து தேடப்படக் கூடிய ஒன்றாக இருக்கிறது. ஆனால் வழக்காறுகளின் அரசியல் என்பதில் டெலூஸ் கூறுவது போல அல்லாமல், இத்தாலி நாட்டு அறிஞர் அந்தோனியோ கிராம்சி இது ஒரு அறிவியல் என்கிறார். வழக்காறுகளின் செயல்பாடு ஒரு அறிவியல் என்கிறார். எனவே நாம் கட்டாயம் வழக்காறுகளின் அரசியல் என்று மட்டும் நின்று விடாமல் அதன் அறிவியல் காரணம் என்ன என்பதையே தொடர்ந்து தேட வேண்டும். அப்படியானால் கதைக்கு காரணம் ஒரு கதை அந்தக் கதை, எந்தக் கதை அது ஒரு அறிவியல் கதை. அந்த அறிவியல் கதை என்ன.

## பண்பாட்டின் வரையறைகள்

பண்பாடு குறித்து பல்வேறு ஆய்வாளர்கள் பல்வேறு வரையறைகளைக் குறிப்பிட்டுள்ளனர். அவற்றில் முக்கியமானது E.B.டெய்லரின் வரையறை ஆகும். இவர் பண்பாடு குறித்து குறிப்பிடும் போது, "பண்பாடு என்பது மனிதன் சமுதாயத்தில் ஒரு உறுப்பினராக இருந்து கற்கும் அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கநெறிகள், மற்றும் பழக்கவழக்கங்கள், அடங்கிய சிக்கலான முழுமையாகும்" என்கிறார். நம் தேவையை நிறைவேற்றிக்கொள்ள செய்யும் அனைத்துமே பண்பாடு ஆகும். பண்பாடு பற்றி லூயிஸ் தனது வரையறையில், 'மக்களின் ஒட்டுமொத்த வாழ்க்கை, 'குழுவிலிருந்து தனி நபர் பெறும் சமூக மரபுத் தொடர்ச்சி' , கற்றலின் மூலம் பெறும் நடத்தை' என்று குறிப்பிடுகிறார்.

## அரசியல் வரையறைகள்

அரிஸ்டாட்டில் எழுதிய அரசியல் எனும் நூலில். அரசியல் என்பதற்கு "நகரங்களின் விவகாரங்கள்" என்று வரையறுக்கப்படுகின்றது. ஒருவர் தனக்கான தேவையை நிறைவேற்றிக்கொள்ள செய்யும் அனைத்துமே அரசியலாகும். என்று அறிஞர்கள் மிக எளிமையாக வரையறை செய்கின்றனர்.

அரசியல் என்பது மக்கள் குழுக்களில் முடிவெடுக்கும் முறையைக் குறிக்கும் சொல். பொதுவாக அரசமைப்புகளைக் குறிப்பதற்காக இச்சொல் பயன்பட்டாலும், அரசியல் என்பது உண்மையில், அலுவலகம், கல்வி, மற்றும் சமய நிறுவனங்கள் உட்பட அனைத்து மனித குழுக்களின் செயல்பாடுகள் அனைத்திலும் காணப்படுகிறது. இவ்வாறு அரசியல் என்பது அதிகாரம் சார்ந்தது என்று கூறப்படுகிறது (Painter & Jeffrey, 2009). மேலும் அரசியல் இராசரிக முறை, அரசியல் படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்று தமிழ் அகராதி குறிப்பிடுகிறது.

## பண்பாட்டு அடையாள அரசியல்

பண்பாட்டுக் கூறுகளால் ஆனது பண்பாடு. பண்பாடு என்பது அன்றாட பழக்கங்கள் மற்றும் வாழ்க்கை நடைமுறைகள். இவை கருத்தாக்கமாக அமைகின்றன. வழக்காறுகளில் அனைத்தும் அரசியல். நாம் தினமும் சாப்பிடும் உணவு, உடை, இருப்பிடம் என்ற ஒன்று பொதுவானதாகவும், சாதாரணமானதாகவும், தோன்றலாம், ஆனால் அப்படியல்ல, மேலும் குறிப்பிட்ட சில வழக்காறுகள் பண்பாட்டு அடையாளமாக உருவாகும். உருவாக்கப்படும். இவற்றை உருவாக்குபவர்கள் யார் என்று நேரடியாக சுட்டிக்காட்ட முடியாது. இவ்வாறு எவரையும் சுட்டிக்காட்ட முடியாது என்பதால், பண்பாட்டு அடையாள உருவாக்கங்கள் நிகழ்ந்துவிடவில்லை என்பது பொருளல்ல, இந்த பண்பாட்டு அடையாளங்களால் உண்டாகும் பலன்கள் யாரை எப்படிச் சென்றடைகிறது என்று உற்று நோக்கினால் இவை அனைத்து தரப்பினருக்கும் நன்மை அளிப்பதில்லை. பொதுவான பண்பாட்டு அடையாளங்கள் பொதுவானவைகளாக தோன்றினாலும் அவை குறிப்பிட்ட சமூகத்தாருக்கோ அல்லது அதிகார வர்க்கத்தினருக்கோ நன்மையானதாக சென்றடையுமாறு பண்பாட்டு அடையாள உருவாக்கங்கள் அமைகின்றன. இவ்வாறு வழக்காறுகளில் அரசியல் நிகழும். முத்துப்பட்டன் கதைப்பாடலில் நிகழ்ந்த அரசியலை நா.வானமாமலை சுட்டுகிறார். மேலும் அருணன் தனது கொலைக்கலங்களின் வாக்குமூலங்கள் என்ற தனது நூலில் இந்த பண்பாட்டு அடையாள அரசியலை எடுத்து விளக்குகிறார். அவர் குறிப்பிடும் போது, காத்தவராயன், நந்தன், மதுரைவீரன் கதைகளை ஆய்வு செய்து அவற்றில் நடந்த பண்பாட்டு அடையாள அரசியலை விளக்குகிறார்.

பண்பாட்டு அடையாள அரசியலின் மையப் பொருளே, சமூகத்தில் ஒரு குறிப்பிட்ட அதிகார வர்க்கத்தினரை சார்ந்ததாகவும் அவர்களின் பண்பாட்டு அடையாளங்களே பொதுவானதாகவும், மேலும் அதற்கு எதிரான ஒரு பண்பாட்டு அடையாளத்தை உருவாக்கும் அரசியலும் அல்லது பண்பாட்டு அடையாளங்களை அழித்sதல், மாற்றி அமைத்தல் போன்ற அரசியலை செய்வதை காணமுடிகிறது. சமூகத்தில் அதிகார வர்க்கத்தினர் தங்களுக்குச் சாதகமாக, தங்களுடைய வழக்காறுகளை பொதுமக்களின் மனங்களில் விதைத்து அவற்றை மீண்டும் மீண்டும் காண்பித்து, அவையே எல்லா மக்களுக்குமான பொதுவானதாக சித்தரிக்கும் பாங்கு, மனப்பான்மை, பாடம், கருத்து உருவாக்கம் இவையே மிகமுக்கிய பண்பாட்டு அரசியல் ஆகும்.

பண்பாடு என்பது எல்லா மக்களுக்கும் உரியது. குறிப்பாக பன்மைத்தன்மை வாய்ந்தது. பார்ப்பனர்களின் சைவ உணவு பழக்கமே மிக புனிதமான உணவுப் பழக்கம் மற்றவை புனிதமானது அல்ல என்ற எண்ணத்தை உருவாக்குதல். மேலும் புனிதம், தீட்டு என்ற எதிர் எதிர் துருவங்களை உருவாக்குவது என்பது அரசியல். பண்பாடு என்பது எழுதப்பட்ட சட்டமோ நிரந்தரமான விதிகள் கொண்ட அட்டவணைகளோ அல்ல. அவனுக்கானது அது, இவனுக்கானது இது என்று பண்பாடு பன்மைத் தன்மை கொண்டது. சமகால பண்பாட்டு அரசியல் இப்படி அனுமதிப்பதில்லை. சைவ உணவு முறை என்பதும் ஒவ்வொரு சமூகத்திலும் வெவ்வேறு முறைகளில் கடைபிடிக்கப்படுவது. இது பார்ப்பனர்களுக்கானது மட்டுமல்ல. ஆனால் பார்பனர்களுக்கானதே சைவ உணவு பழக்க முறை என்று கட்டமைக்கும் அரசியல் இதனால் உண்டாகும் புனிதம், தீட்டு என்ற கண்ணுக்குப் புலப்படாத பேதங்களை கட்டமைக்கும் பண்பாட்டு அரசியல் என்பதே தீங்கானது.

பண்பாட்டிற்கு வடிவம் இல்லை, உருவம் இல்லை. பன்மைத் தன்மை வாய்ந்தது அனைத்து மக்களுக்குமானது ஆனால் இந்த பண்பாட்டின் பெயரால், நடத்தப்படும் அரசியல் பண்பாட்டு அரசியல் ஆகும்.

### மதுரைக்கான பண்பாட்டு அடையாளங்களை உருவாக்குதல்

மதுரைக்கான பண்பாட்டு அடையாளங்களை உருவாக்குதல் என்ற அரசியல் குறிப்பிடப்பட வேண்டியவை. இந்த அரசியல் நிகழ்வு சமகால அளவில் நடக்கும் நிகழ்வு இதனால் வடிவமற்ற ஒரு பண்பாடு வடிவம் பெறுகிறது. இதனையே குறியீட்டாக்கம் என்று நிரூவினர் மொழியியல் வல்லுநர் சசூர். இது பண்பாட்டில் நிகழும் போது இது புனிதம் தீட்டு என்ற பேதங்களை உருவாக்கும் ஆபத்தினை உருவாக்கும் என்று பண்பாட்டு ஆய்வாளர்கள் கருதுகின்றனர். வழக்காறுகளில் ஏற்படும் இந்த பண்பாட்டு அரசியல் சமகாலத்தில் உற்று நோக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு பண்பாட்டின் அரசியலை பொது வெளிக்கு அடையாளப்படுத்த வேண்டும். இந்த பண்பாட்டு அரசியல் என்பதை மேலும் தொடர் ஆய்வு பொருளாக எடுத்து ஆய்வு செய்யும் போது நமக்கான பண்பாடு பற்றிய சமகால புரிதல் உண்டாகும். நம்மைச் சுற்றி நடக்கும் விழாக்களுக்கான ஒரு ஆய்வு பார்வை உருவாகும். அதில் ஏற்படும் அடையாள உருவாக்க அரசியல் புலப்படும் (Arumugam, 2009).

## முடிவுரை

மதுரைக்கான பண்பாட்டு அடையாளங்கள் பல உருவாக்கப்பட்டு வருகின்றன. இவை பண்பாட்டு அரசியல், இந்த அடையாள அரசியல் பண்பாட்டு அடையாளங்கள் பற்றிய ஒரு அனுகுமுறையை விளக்கும். வழக்காறுகள் அரசியலுக்கானவைகளே இந்த அரசியலால் உருவாகப் போகும் விளைவுகளை முன் கூட்டியே கண்டறிய முடியும். மதுரையின் பண்பாட்டு அடையாளமாக சித்திரைத் திருவிழாவை உருவாக்கும் அரசியலை முன்னெடுக்கும் ஒரு காரணியாக இந்த புராணங்கள் உள்ளன. வழக்காறுகளுக்கு காரணங்கள் தேடும் பெரிய முயற்சிகளில் சில காரணங்கள் தற்காலிகமான தீர்வாக கிடைப்பது போன்று, இரு புராணங்கள் மதுரையின் பண்பாட்டு அடையாளமாக சித்திரைத் திருவிழாவை உருவாக்கும் ஒரு முக்கிய காரணியாக செயல்படுவதை காண முடிகிறது.

## References

Arumugam, P. (2009) Madurai Kovilkalum Thiruvikalaklum, Chennai, India

Painter, J., Jeffrey, A. (2009) Political Geography, SAGE Publications, New York, United States

Srinivasan, R. (1992) Thiruvilaiyadar Puranam, Aniyagam Pathippagam, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License